©
தமிழ்நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 41] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 29, 2014
ஐப்பசி 12, ஜய, திருவள்ளுவர் ஆண்டு – 2045

## பகுதி III—பிரிவு 1(a) இன் இணைப்பு

### அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

**தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை**

**அறிவிக்கை**

*[அரசாணை (நிலை) எண் 39, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (K–2)த் துறை, 8 மே 2014.]*

1951 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் சட்டத்தின் (மத்திய சட்டம் 69/1951) 43 ஆம் பிரிவைச் சேர்ந்த (1), (2) ஆகிய உட்பிரிவுகளில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாடு, 1955 ஆம் ஆண்டு மலைத்தோட்டத் தொழிலாளர் விதிகளில் செய்யக் கருதியுள்ள கீழ்க்காணும் வரைவுத் திருத்தங்கள் மேற்சொன்ன சட்டத்தின் 43ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவில் சொல்லியுள்ளவாறு இதனால் வெளியிடப்படுகிறது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து ஆறு வாரங்கள் முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் இந்த வரைவு திருத்தங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், மேற்சொன்ன கால அளவு முடிவடைவதற்கு முன்னர், இது தொடர்பாக யாதொரு நபர்களிடமிருந்து பெறப்படும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு பரிசீலிக்கும் என்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அதனை சென்னை – 600 006–இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர்மூலமாக ***தமிழ்நாடு அரசு*** முதன்மைச் செயலாளர், தொழிலாளர் – வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க •வேண்டும்.

**வரைவுத் திருத்தங்கள்**

மேற்சொன்ன விதிகளில்,—

(1) அத்தியாயம் VI—இல்,—

(a) தலைப்பில், ‘‘மற்றும் மகப்பேறு’’ என்ற சொற்கள் விட்டுவிடப்பட வேண்டும்.

(b) விதிகள் 72, 73, 74, 75, 76, 77, 78, 79 மற்றும் 80 ஆகியன விட்டுவிடப்பட வேண்டும்.

(2) படிவம் எண்கள் 8, 9, 10 மற்றும் 11 விட்டுவிடப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

DTP—III-1(a)(T-Sup.) (41)